20 JUN

நகராட்சி நிர்வாக இயக்குநர்
அலுவலகம் சென்னை-5.

ந.க.எண்.35792/96/...

நாள்: ....6.96.

# சுற்றறிக்கை

பொருள்: அலுவலக நடைமுறை - நேர்மையாக செயலாற்றுதல் அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

பார்வை: அரசு கடித எண். 22796/அந2/96-3 நாள் 12.6.96 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை).

-----

11.6.96 அன்று நடந்த மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்களின் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் தமது தொடக்கவுரையில் கீழ் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை கூறினார்கள்:-

"மக்கள் நியாயமான, நேர்மையான, தூய்மையான ஊழலற்ற நிர்வாகத்தை எதிர்பார்க்கிறார்கள். எல்லா நிலைகளிலும் ஒரு தூய நிர்வாகத்தைத் தருவதற்கு அரசு விரும்புகிறது. அரசு நிர்வாகம் எல்லா தரத்திலும் மேம்பட்டதாக இருக்க வேண்டும். காலதாமதம் தான் ஊழலுக்கு வித்திடுகிறது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். கோப்புகள் சிவப்பு நாடாவில் கட்டப்பட்டு உறங்கிக் கொண்டிருக்கும்போது ஊழல் எழுந்து உட்கார்ந்து வர் கதவைத் தட்டி விடுகிறது. எனவே நிர்வாகத்தில் உள்ள எல்லா அதிகாரிகளும் விழிப்புடன் பணியாற்ற வேண்டும். தார்மீக நெறிப்படி பணியாற்ற வேண்டும். முடிவுகளை பாரபட்சமின்றி சட்டத்தின் அடிப்படையில் நீதியின் அடிப்படையில் எல்லா அலுவலர்களும், அதிகாரிகளும் மேற்கொண்டால் நிர்வாகம் தூய்மையானதாக இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. பொதுமக்கள் மனுக்களையும், புகார்களையும் உடனுக்குடன் பரிசீலனை செய்து பதில் தர வேண்டும். அவர்கள் பாதிக்கப்பட்டு இருந்தால் பரிகாரம் செய்ய வேண்டும். அரசு இயந்திரத்தை முறைகேடாக பயன்படுத்துபவர்களை கண்டுபிடித்து தண்டனை தர வேண்டும். எல்லா துறைகளிலும் தூய்மையையும், விதிகளையும் கடைபிடிக்கக்கூடிய அளவுக்கு ஆய்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

2. மாண்புமிகு முதல்வர் அவர்களின் மேற்கண்ட அறிவுரையும் உணர்ந்த பொருளைப் புரிந்து கொண்டு அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்கள் கோப்புகளில் நடவடிக்கை மேற்கொள்வதில் தாமதத்தை தவிர்க்கவும், பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் மனு மீது உரிய நடவடிக்கையை தாமதமின்றி மேற்கொள்வதில் தனி கவனம் செலுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இச்சுற்றறிக்கை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலை உடனே அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

நகராட்சி நிர்வாக இயக்குநருக்காக.

19.6.96

பெறுநர்
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையர்கள்,
இவ்வலுவலக அனைத்து அலுவலர்கள்.
அனைத்து கண்காணிப்பாளர்கள்.
'அந1'/'அந4' (இருப்பு கோப்பிற்கு).